முருகப்பெருமான் துணை

**மகான் அர்ச்சுனர் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

02.07.2021, வெள்ளிக்கிழமை

1. தவசியே ஞானமகா குருவே
தானதரும பலமாக வந்த
அவதார ஆறுமுக அரங்கனே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே யோகபிரசன்ன ஆசி
குறைவிலா பிலவ மிதுனதிங்கள்
கருதியே மூவாறு திகதி புகர்வாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 18ம் நாள், 02.07.2021 வெள்ளிக்கிழமை)
கண்டுரைப்பேன் அர்ச்சுனன் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான குருவருள் துணைபெற
ஞானமெனும் அழியாமை சக்தி
ஞாலமதில் எங்கும் பரவியே
4. பரவியே கலியின் பாவங்கள்
பாருலகை விட்டு அகலும்
அறமெனும் அரங்கன் சேவை
அகிலமெங்கும் ஏற்று நடக்க
5. நடக்கவே நன்மைகள் கூடும்
ஞானவான்களெனும் படைஉருவாகி
இடர்களின்றி இந்த பேருலகம்
எல்லா பாதுகாப்பும் காணும்
6. காணவே கந்த வேலன் வழிபாடு
கருணைபட எங்கும் நடக்க
ஞானமெனும் வேலவன் சக்தி
நாலா திக்கிலும் காப்புநிலை ஆகி
7. ஆகியே மனிதர்களுள் ஞானிகள்
அரங்க ஞானி வழிகாட்டலால்
மகிழவே ஞானிகள் வெளிப்பாடாகி
மண்ணை காக்கும் அம்சமாக
8. ஆகவே அற்புதம் நிகழ்ந்து
அகிலம் பெருமாற்றம் காணும்
வகையான ஞானிகள் பூசை
வணங்கி உலகமக்கள் வர
9. வருகவே நல்ல தலைமைகளும்
வளம் மிக்க ஞானபூமியாக
தருமபலம் கொண்டுள்ள செயலாக
தரணியே சகலவகையும் தேறி

10. தேறியே ஞானிகள் ஆட்சி
தேசிகன் வழி ஞான ஆட்சியாக
வரும் உலகில் சடுதி அமைந்து
வையகம் மேன்மை காணும்

11. காணவே அரங்கன் திருவடி
கண்டு சேவிக்கும் மக்களுக்கு
ஞான பண்டிதன் அருளும்கிட்டும்
நாட்டிய யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–